அரசியல் விஞ்ஞானம், (அலகு-3):அரசு

தொகுப்பு: சிவம் விதுர்ஷன் ,
அரசியல் விஞ்ஞானத்துறை (நான்காம் வருடம்).
பேராதனைப் பல்கலைக்கழகம்

* Required

1. பெயர்:

_____

2. பாடசாலை பெயர்:

_____

3. பரீட்சைக்கு தோற்றும் வருடம்:

_____

20*4=80 புள்ளிகள்

எல்லா வினாக்களுக்கும் சரியான விடைகளை தெரிவு செய்க.

www.lkedu.lk

4. 1. அரசு என்பது * 4 points

Mark only one oval.

- 1. மனிதர்களால் தாபிக்கப்பட்டுள்ள பல்வேறு சங்கங்களுள் ஒன்று மட்டுமே ஆகும்.
- 2.மானசீகமான ஒன்றாகும்.
- 3.ஸ்பரிசிக்க கூடியதும் புலனாகாததுமாகும்
- 4.நிரந்தரமான ஒன்றாகும்
- 5. முழு சமூகத்தினதும் பொதுச்சித்தத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

5. 2. தற்கால உலகில் அரசின் பணிகளுள் அடங்காதவை, * 4 points

Mark only one oval.

- 1.சட்டத்தின், சமூக வலையமைப்பினதும், சொத்துக்களின் காவலனாகவும் இருத்தல்.
- 2.பொருளாதார நிர்வாகம் மற்றும் வழி நடாத்துதல்.
- 3.சமூக நிர்வாகம், வழி நடத்துதல் மற்றும் சமூக கண்காணிப்பு.
- 4.சமூகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கினை பேணல்.
- 5.அனைத்து விடயங்களையும் தனியாரிடம் ஒப்படைத்து கண்காணித்தல்.

6. 3. "அரசு என்பது வரையறுக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்தில் பலாத்கார அதிகாரத்தை வெளிப்படையாக பயன்படுத்தும் தனியுரிமை தமக்கே உள்ளது எனக் கூறும் மனித குழுவாகும்" என்று கூறியவர், * 4 points

Mark only one oval.

- 1.மக்ஸ்வெபர்
- 2.அரிஸ்டோட்டில்
- 3.கொப்ஸ்
- 4.லொக்
- 5.ரூசோ

7. 4. நவீன ஆள்புல அரசின் நான்கு பிரதான அங்கங்களுள் அடங்காதவை, * 4 points

Mark only one oval.

- 1.வரையறுக்கப்பட்ட ஆள்புல பிரதேசம்
- 2.தேசிய அடிப்படை
- 3. அரசாங்கம்
- 4.நிறுவன ஒழுங்கமைப்புகள்
- 5.இறைமை

www.lkedu.lk

8. 5. நவீன தேசிய அரசு, * 4 points

Mark only one oval.

- 1.நவீன அரசுகளை அடையாளப்படுத்த சமூகவியலில் பயன்படுத்தப்படும் ஒரு எண்ணக்கருவாகும்.
- 2.இக் கருத்து 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வளர்ச்சி கண்டது.
- 3.இதன் அடிப்படை ஒரு இனத்துக்கு- ஒரு அரசு என்பதாகும்.
- 4.ஆரம்பகால தேசிய அரசுகளுக்கு ஆள்புலம், ஆள்புல எல்லைகள் என்பன மட்டுமே இருந்தன.
- 5.ஆரம்பகால நவீன தேசிய அரசுகள் தேசிய அரசுகளாக காணப்படாமையே அதன் விசேட பண்பாக இருந்தது.

9. 6. தேசிய அரசுகளின் முடிவு (The end of the nation state) என்னும் கட்டுரையில் உலகமயமாக்கல் மற்றும் அரசின் இருப்பு பற்றி எழுதியவர் * 4 points

Mark only one oval.

- 1.ஜீன் மேரி கெஹேன்னோ
- 2.தியாடோர் லெவிட்
- 3. அந்தோனி கிடன்ஸ்
- 4.ப்டெரிக் ஜெம்சன்
- 5. டேவிட் ஹெல்டு

10. 7. கிரேக்க அரசு என்பது, * 4 points

Mark only one oval.

- 1.கோத்திர அரசு முறையின் முன்னர் வளர்ச்சி பெற்ற அரசு முறையாகும்.
- 2.கிரேக்க சூழல் அரசியல் ,பொருளாதாரம், ஒழுக்கக ரீதியான அம்சங்களை கோத்திர அரசிடம் இருந்து பெற்றவை.
- 3.கிரேக்க அரசு சுயாதீன அலகாக இருந்தமை
- 4.நகர அரசு அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த அலகொன்றாக இருந்தமை.
- 5. நகரத்தின் மதமே அனைத்து பிரஜைகளின் மதமாக இருந்தது.

www.lkedu.lk

11. 8. தாராள ஜனநாயக அரசு என்பது, 4 points

Mark only one oval.

- 1.வரையறுக்கபட்ட அரசு தொடர்பான எண்ணக்கருவே இதன் அடிப்படை ஆகும்.
- 2.எதேச்சையதிகாரத்துக்கு எதிராக 17 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரை பகுதியில் ஐரோப்பாவில் தோன்றியது.
- 3.இது ஒருவகை நிலையான பொருளாதார முறையுடன் இணைந்த கருத்தியலாகும்.
- 4.இது பிரதானமாக முதலாளித்துவ பொருளாதார முறையினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் முறையாகும்.
- 5.இது முதலாளித்துவ பொருளாதார முறையை சர்வாதிகார ஆட்சியுடன் இணைக்கிறது.

12. 9. முடியாட்சி முறை * 4 points

Mark only one oval.

- 1.பெரும்பாலும் பரம்பரையாக அரசாட்சிக்கு உரிமை கோரும்.
- 2. தனி நபரினால் நடைமுறைபடுத்தபடும் ஆட்சி முறை ஆகும்.
- 3. அரசன் அல்லது அரசி ஆட்சிக்கு வருவது சம்பிரதாயம் ஆகும்.
- 4.அரசாட்சியில் ஆட்சியாளனுக்கு எல்லையற்ற அதிகாரம் கிடைக்கிறது.
- 5.சட்ட, நிறைவேற்று அதிகாரம் மன்னன் மற்றும் மக்கள் சபையிடமே காணப்படும்.

13. 10. பிரதிநிதித்துவ அரசாங்கம் செயற்படுவதற்கு தேவையான அடிப்படை சமூக அரசியல் மாதிரிகளில் அடங்காதவை, * 4 points

Mark only one oval.

- 1. மக்கள் ஆட்சி
- 2.யாப்புறுவாதம்
- 3.சுதந்திரமான தேர்தல்கள்
- 4. போட்டிக்கட்சி முறை
- 5. தனியாள் அரசாங்கம்

www.lkedu.lk

14. 11. சமவுடைமை அரசு மாதிரி. * 4 points

Mark only one oval.

- 1.இருபதாம் நூற்றாண்டில் அபிவிருத்தி அடைந்த அரச முறையாகும்.
- 2.உழைப்புச் சுரண்டல் அற்ற, சமூகத்தில் வகுப்புவாதமொன்று இல்லாத சமத்துவவாத சமூகத்தை கட்டியெழுப்புவதே அரசின் நோக்கம் ஆகும்.
- 3.சமவுடைமை அரசின் உரிமையாளர்கள் எப்பொழுதும் முதலாளி வர்க்கம் ஆகும்.
- 4. இங்கு தனியார் முயற்சிக்கு பதிலாக அரச ஆதிபத்தியம் நிலைநிறுத்தப்படும்.
- 5.இங்கு பிரஜைகளின் பௌதீக வாழ்க்கை தரத்தை அபிவிருத்தி செய்வதிலே அதிக கரிசனை கொள்கிறது.

15. 12. பாசிஸவாத அரசானது, * 4 points

Mark only one oval.

- 1.அரசின் உயர்தன்மை இதன் பிரதான பண்பாகும்.
- 2.இந்த அரசின் அதிகாரம் உயரியதும் நிகரற்றதுமாக காணப்படும்.
- 3.அரசும் ஆட்சியாளனும் சர்வசமமானவையாக காணப்படும்.
- 4.பாசிசவாத அரசில் தனி கட்சி முறை மாத்திரமே காணப்படும்.
- 5.அரசு மக்களை விட கீழானது.

16. 13. "அதிசிறப்பு மனிதன்" (SUPER MAN) என்ற எண்ணக்கருவை முன்வைத்தவர், * 4 points

Mark only one oval.

- 1.நீட்சே
- 2.முசோலினி
- 3.ஹிட்லர்
- 4. பிஸ்மார்க்
- 5.கால்மார்க்ஸ்

www.kedu.lk

17. 14. காலனித்துவ அரசு, * 4 points

Mark only one oval.

- 1.இந்த அரச மாதிரி 18 ஆம் நூற்றாண்டின் பின்னரே வளர்ச்சி அடைந்தது.
- 2.காலனித்துவ ஆட்சியில் யுத்த செயற்பாடுகளினால் காலனித்துவ அரசுகள் இராணுவ அரசுகளாகவே விருத்தி அடைந்தன.
- 3.காலனித்துவ அரசுகள் மத்தியமயப்படுத்தப்பட்ட முறையில் ஒழுங்கமைந்து இருந்தன.
- 4. இராணுவ புரட்சி மூலம் ஜனநாயக ஆட்சி அமைப்புக்களை மாற்றி அமைத்தல் மற்றும் அதிகாரவாத ஆட்சிமுறை உருவாதல் என்பன இதன் பிரதான பண்பாகும்.
- 5.காலனித்துவ சமூகத்தில் காலனித்துவ அரசு இராணுவ அதிகாரவாத அரசாகவே கட்டி எழுப்பப்பட்டு இருந்தது.

18. 15. பின் காலனித்துவ அரச முறை பற்றிய கோட்பாட்டை கட்டியெழுப்பியவர், * 4 points

Mark only one oval.

- 1. ஹம்சா அலாவி
- 2.குவாமே நிக்ரூமா.
- 3.லெனின்.
- 4.பெலிக்சு பூவே-புவாளு.
- 5.ஹிட்லர்

www.lkedu.lk

19. 16. பிரஜை என்பவன், * 4 points

Mark only one oval.

1. அரசின் உறுப்பினன் ஆவான்.

2.பொது வாழ்க்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பங்குபற்றுபவன்.

3.அரசின் செயற்பாட்டில் நேரடியாக பங்குபற்றுபவன் பிரஜை என்கிறார் அரிஸ்டாட்டில்.

4.பிரஜை என்பவன் அரசுக்கு பொறுப்பு கூற தேவையில்லை.

5.பிரஜை ஒருவனுக்கு பிரஜாவுரிமை வழங்கவும், அதை நீக்கவும் ஏக உரித்தாளன் அரசாகும்.

20. 17. சமூக ஒப்பந்த கோட்பாடு, * 4 points

Mark only one oval.

1.தெய்வீக உரிமை கோட்பாட்டுக்கு மாற்றீடாக உருவான ஒன்றாகும்.

2. இது ஐரோப்பாவில் அரசின் அதிகாரத்தை நியாயப்படுத்த உருவானது.

3.இது அரசு என்பது சமூகத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவு என்கிறது.

4. இக் கருத்தை கோட்பாடாக முன்வைத்தவர்கள் கொப்ஸ், லொக் மற்றும் ரூசோ ஆகிய மூவரும் ஆகும்.

5. இறைமையின் முழு நிறைவான அதிகாரம் மற்றும் குடி மக்களின் முழுநிறைவான சுதந்திரம் என்பவற்றை ஒன்றாக இணைத்தவர் கொப்ஸ்.

www.ikedu.lk

21. 18. மாக்ஸ்வாதம், * 4 points

Mark only one oval.

- 1.பொருளாதாரத்தை அடிப்படையாக் கொண்டு வரலாறு மற்றும் சமூகம் பற்றி விபரிப்பதற்காக முன்வைக்கப்பட்ட பரந்த தத்துவம் ஆகும்.
- 2.கார்ள்மார்க்ஸ் மற்றும் எங்கல்ஸ் என்போரால் அறிமுகம் செய்யப்பட்ட கோட்பாடு.
- 3.முதலாளித்துவ அரசை இல்லாதொழிக்கும் வரலாற்றுக் கடமையை மாக்ஸ்வாதம் தொழிலாளர் வர்க்கத்துக்கு வழங்கி உள்ளது.
- 4.அரசு இறுதிவரை அழியாது மக்களுக்காக தொடர்ந்து பயணிக்கும் என்கிறது.
- 5.சமவுடைமை புரட்சியின் பின்னர் வர்க்கமற்ற அரசு ஒன்று தோன்றும் எனக் கூறுகிறது.

22. 19. தாராண்மைவாதம், * 4 points

Mark only one oval.

- 1.சுதந்திரம் தொடர்பான அரசியல் கருத்தியலாக உள்ளது.
- 2. 18 ஆம் நூற்றாண்டின் இறுதி அரை பகுதியில் ஐரோப்பாவில் இருந்து பரவல் அடைந்தது.
- 3.தனியார் சொத்துரிமைக்கு முக்கியத்துவம் வழங்குகிறது.
- 4.காலத்துக்கு காலம் தலையிடா அரசு, நலன்புரி அரசு, குறைந்தபட்ச அரசு என தனது முகத்தை மாற்றிக்கொண்டு வளர்ச்சி அடைந்தது.
- 5.திறந்த சந்தை பொருளாதரத்தை எதிர்க்கின்றது.

www.ikedu.lk

23. 20. பெண்ணியல்வாதம், * 4 points

Mark only one oval.

1.பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட கருத்தியலாகும்.

2. ஆதிபத்தியம் மற்றும் அடக்குமுறை ஊடாக பாலுறவு நிலை மேலெழுந்து ஆண்கள் மற்றும் பெண்கள் சமூக பிரிவுகளாக படைக்கப்பட்டுள்ளனர்.

3. இதில் லிபரல், மாக்ஸ்வாத மற்றும் தீவிரவாத பெண்ணியல்வாதம் என்று பல கற்றல் துறைகள் உள்ளது.

4.லிபரல் பெண்ணியவாதிகள் பெண்களின் விடுதலைக்காக அரசின் தலையீட்டை ஏற்கின்றனர்.

5.மாக்ஸ்வாத பெண்ணியவாதிகள் முதலாளித்துவ அரசை ஆதரிக்கின்றனர்.

This content is neither created nor endorsed by Google.

Google Forms

www.lkedu.lk